*கவனிக்க.- 21.04.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி - (II அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2017 - 2017 අප්‍රේල් මස 28 වැනි සිකුරාදා - 2017.04.28

*2017 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 776 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, மே மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, மே மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் - வெற்றிடம்

## இப்பாகமுவ பிரதேச சபை

இப்பாகமுவ பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ் காணப்படுகின்ற அட்டவணையில் காணப்படும் பதவிகளுக்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதற்காக இப்பாகமுவ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் நிரந்தரமாக வசிக்கும் இலங்கைப் பிரசைகளிடத்தில் இருந்து விண்ணப்பப்பங்கள் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | பதவிப் பெயர் | புதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | மின் தொழில் நுட்பவியலாளர் | 01 | 3/2016 பொ.நி.சு. படி PL2 2016 ரூ.25250-10X270-10X300-10X330-12X350-ரூபா38450 | **வெளி விண்ணப்பதாரிகளுக்கு**<br>(அ) க.பொ.த. (சா.தர) பரீட்சையில் இரு பாடங் களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து)<br><br>அரசினால் ஏற்றுக் கொண்ட தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது தேசிய தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற மின் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி சான்றிதழ் (N.V.Q.)2 அல்லது 3 தரத்தில் திறமைச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு**<br>(M) தற்போது மாகாண அரச சேவையில் இப்பாகமுவ பிரதேச சபையில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரம் (9ஆம் ஆண்டு) சித்தயடைந்திருத்தல், அரசினால் ஏற்றுக் கொண்ட தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது தேசிய தொழிற் பயிற்சி நிறுவனத் தினால் வழங்கப்படுகின்ற மின் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி சான்றிதழ் (N.V.Q.) 2 அல்லது 3 மட்டத்தில் திறமைச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். |
| 02 | சுகாதார தொழிலாளி | 03 | 03/2016 பொ.நி.சு படி PL1 2016 ரூ.24250-10X250-10X270-10X300-12X330- ரூபா 36410 | **வெளி விண்ணப்பதாரிகளுக்கு**<br>(அ) க.பொ.தா. (சா.தர) பரீட்சையில் இரு பாடங் களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து)<br><br>**உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு**<br>(M) தற்போது மாகாண அரச சேவையில் இப்பாகமுவ பிரதேச சபையில் நிரந்தரச் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரம் (9ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 03 | பாதைகள் தொழிலாளி | 07 | 3/2016 பொ.நி.சு படி PL1 2016 ரூ.24250-10X250-10X270-10X300-12X330-ரூபா 36410 | **வெளி விண்ணப்பதாரிகளுக்கு**<br>(அ) க.பொ.தா. (சா.தர) பரீட்சையில் இரு பாடங் களிலாவது சித்தியடைந்திருத்தல்வேண்டும்.(விருப்பு பாடம் தவிர்த்து)<br><br>**உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு**<br>இப்பாகமுவ பிரதேச சபையில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரம் (9ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

**2. தேவையான வேறு தகமைகள் :**

(i) விண்ணப்பதாரி இலங்கைக் குடியுரிமையுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(ii) நல்லொழுக்கமும் ஆரோக்கியமாகவுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் கடைசி திகதிக்கு வயது 18 க்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரிகள் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக தண்டனை பெற்றவராக இருத்தலாகாது.

(v) இப்பாகமுவ பிரதேச சபையில் தற்போது அமைய, மாதிரி, தற்காலிக, ஒப்பந்த மற்றும் தொண்டர் அடிப்படையில் சேவையில் உள்ளவர்களுக்கு முன்உரிமை வழங்கப்படும்.

**3. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்த பதவி நிரந்தரமானது

(ii) விதவைகள் அநாதைகள்/விதவைகள் தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதல் வேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மூன்று வருட காலத்திற்கு தகுதி காண் காலத்துக்கு உட்படுவர்.

(iv) இந்த ஆட்சேர்பு நிபந்தனைகளுக்கும் கட்டளைகளுக்கும் மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை மற்றும் நிதிச் சட்டம் வடமேல் மாகாணஅரச நிர்வாக ஒப்பந்தங்களுக்கும், உள்ளூராட்சி மாகாண சபை அரச சேவை அல்லது அரச திணைக்களத்தினால் அல்லது இப்பாகமுவ பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உடன்படல் வேண்டும்.

(v) நியமனம் கிடைத்த பின்பு மூன்று ஆண்டு காலத்தின் பின்பு சேவை உறுதிப்படுத்தல் பற்றி கவனத்தில் எடுக்கப்படும்.

**விண்ணப்பிக்க வேண்டி முறை :**

இங்கு கீழ்க் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படி 12"X8" அளவிலான கடதாசியில் விண்ணப்பப் படிவத்தை ஒழுங்கமைத்து 2017.05.22 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக "செயலாளர், இப்பாகமுவ பிரதேச சபை, இப்பாகமுவ" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உரிய பதவியின் பெயரினை குறிப்பிடப்பட வேண்டும். உரிய திகதிக்கு பின்பு அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்களும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும். தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு பதவிக்காகவும் வெவ்வேறாக விண்ணப்பப் படிவம் சமர்பிக்க வேண்டும்.

**விண்ணப்பப் படிவத்துடன் கீழ் காணப்படும் சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்:**

1. பிறப்புச் சான்றிதழ்;
2. கல்விச் சான்றிதழ்;
3. தொழில்நுட்ப திறமையும் ஆற்றலும் மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ் (தொழில்நுட்ப மற்றும் பகுதி தொழில்நுட்ப பதவிக்காக);
4. ஆளடையாளட்டையின் பிரதி;
5. நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளரின் மேலொப்பத்துடனான கிராம அலுவலரின் சான்றிதழ்;
6. மின்சார தொழில்நுட்பவியலாளராக 3 ஆண்டு கால அனுபவம் பற்றிய சேவைச் சான்றிதழ் (மின்சார தொழில் நுட்பவியலாளர் பதவிக்காக மாத்திரம்);
7. மிக அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட இரண்டு நற்சான்றிதழ்கள்.

**ஆட்சேர்பு முறை :**

1. உரிய தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகளுக்கிடையில் தொழில் நேர்முகப் பரீட்சை மற்றும் தொழில் நுட்பத்தினை உறுதிப்படுத்தும் பரிசீலனையின் பெறுபேற்றின்படி சேர்த்துக் கொள்ளப்படுவர்.
2. இந்த விண்ணப்பம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது ஆட்சேர்பு காலம் தாழ்த்தல் அல்லது வேறுபடுத்தல் அல்லது இரத்து செய்யும் அதிகாரம் இப்பாகமுவ பிரதேச சபை செயலாளருக்குரியதாகும்.

ஈ.ஏ. சோமரத்ன,
செயலாளர்,
இப்பாகமுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
இப்பாகமுவ.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இப்பாகமுவ பிரதேச சபையின் ........................................ பதவிக்கான விண்ணப்பம்**

01. (i) விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் : ..............................................................................................

(ii) முதலெழுத்துக்களுக்கான பெயர்: ..............................................................................................

02. நிரந்தர முகவரி : ..............................................................................................

03. பிறந்த திகதி :
வருடங்கள் : ...................... மாதங்கள் : .................................... திகதி : ..................................

(அ) ............................................ திகதியன்று வயது:
வருடங்கள் : ...................... மாதங்கள் : ...................... நாட்கள் : ......................

04. பிரதேச செயலாளர் பிரிவு: ..............................................................................................

05. நீங்கள் இலங்கை பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாகவா? இல்லையாயின் பதிவு செய்யப்பட்டததனாலா என்பது பற்றி : ..............................................................................................

06. ஆண்/பெண் தன்மை : ..............................................................................................

07. திருமணமானவர்/திருமணமாகாதவர் : ..................................................................................

08. சித்தியடைந்துள்ள உயர்ந்த பரீட்சை : ..........................................................................

09. தொழில்நுட்ப தேர்ச்சி : ..............................................................................................

10. தொழிற்தகைமை : ..............................................................................................

11. உங்களுக்கு நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்டதா ? ..................................................................................

12. அவ்வாறாயின் தண்டனையின் தன்மை :..............................................................................................

13. தற்போது பிரதேச சபையில் சேவையில் உள்ளவராயின் அது பற்றி விபரம் : ...................................................................
.........................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என்றும் உறுதிப்படுத்துகிறேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும், பிழையானதும் என்றும் இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவர் என்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்குவதற்கு ஆளாவேன்

திகதி : .........................................

...................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

4-748

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.